©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 45] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 18, 2009
கார்த்திகை 2, திருவள்ளுவர் ஆண்டு – 2040

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

#### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**திருத்த அறிவிக்கை**

*[அரசாணை 2(D) எண் 75, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (G1)த் துறை, நாள்: 10 ஆகஸ்ட் 2009.]*

1985ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் தர நிர்ணயம் (செயலாக்கம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1985), 72ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (2) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மத்திய அரசுடன் கலந்தாலோசித்தப் பின்னர், தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் தர நிர்ணயம் (செயலாக்கம்) விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 72ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்கீழ் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**2.** இதனால் செய்யப்பட்ட திருத்தமானது, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கும் வரும்.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், XIIஆம் விவர அட்டவணையில் "1. எடைகள்" என்ற தலைப்பின் கீழ் "(e) காரட் எடைகள்" என்ற துணைத் தலைப்பு மற்றும் அதன் கீழுள்ள பதிவுகளுக்குப் பின்னர், பின்வரும் துணைத் தலைப்பு மற்றும் பதிவுகள் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் அதாவது,—



DTP—III-1(a)(T-Sup) (45)

**"(f) அதிக திறன் கொண்ட எடைபோடும் இயந்திரங்களை சோதனை செய்வதற்கான தர நிர்ணய எடைகள்:—**

| *எடையளவு* | *பிழை தொடர்பாக அனுமதிக்கத்தக்க உயரளவு கட்டணங்கள்* | |
|---|---|---|
| | 0.5/10000 | 3.3/10000<br>1.7/10000<br>1.0/10000 |
| *(1)* | *(2)* | *(3)* |
| | ரூ. | ரூ. |
| 100 கிலோகிராம் | 75 | 50 |
| 200 கிலோகிராம் | 150 | 100 |
| 500 கிலோகிராம் | 300 | 200 |
| 1000 கிலோகிராம் | 750 | 600 |
| 2000 கிலோகிராம் | 1,500 | 1,000 |
| 5000 கிலோகிராம் | 3,000 | 2,000 |

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**சி. கீதாபழனி,**
*இயக்குநர் (பொறுப்பு),*
*தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.